**13.12.2023**
**OS 139/2022**
**வா.சா.1 முத்துராமலிங்கம்**
**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடன் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். என்னுடன் சேர்த்து மொத்தம் 8பேர்கள். பொன்னம்மாள், சுந்தம்மாள், சுந்தாயி, ஆகியோர்கள் என்னுடன் உடன் பிறந்தவர்கள்தான். அவர்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்தபோது எங்கள் 5பேர்களுக்கு சொத்தை எழுதி வைத்ததால் அவர்களை சேர்க்கவில்லை. நானும், என் சகோதர்கள் 5 பேர் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வருகிறோம் என்றால் சரிதான். அவ்வாறு வசித்து சுமார் 30 வருடங்கள் மேலாகிறது. எங்கள் குடும்ப சொத்துக்கள் என் அப்பா பேரிலும், எனது அம்மா பேரிலும் இருந்தது என்று சொன்னால் இந்த சொத்துக்கள என் அப்பா பேரில் உள்ள சொத்துக்கள். மற்ற சொத்துக்கள் எனது அம்மா பெயரில் தனி பட்டாவில் உள்ளது. நான் பாகம் கேட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் கேட்டுகும் நிலையில் என்னுடன் பிறந்த சகோதரிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. எனது தாயார் பேரில் உள்ள சொத்துக்களை அவர்களாக வைத்துக்கொண்டார்கள். அதனால் சேர்க்கவில்லை. நான் சிங்கப்பூருக்கு 2000ல் சென்றுவிட்டு திரும்பி வந்து சுமார் 11 வருடமாகிறது. எனது அம்மா, அப்பா இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் ஞாபகம் இல்லை. எனது அப்பா நான் சிங்கப்பூருக்கு செல்வதற்கு முன்பாக இறந்துவிட்டார். எனது அம்மா நான் சிங்கப்பூரில் இருக்கும்போது இறந்துவிட்டார். எனது அப்பா 5பேருக்கு எழுதிவைத்துள்ளாதாக சொல்லும் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கில் 50செண்ட் ஆளுக்கு பிரித்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, தலா 75செண்ட் பிரித்துவிட்டார்கள். அவ்வாறு பிரித்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தற்போது 5பேர் பெயரிலும் கூட்டுபட்டாவாகத்தான் உள்ளது. எனது அப்பா இறந்த பின்னிட்டு வாய்கரலாக சொத்துக்களை பிரித்து அனுபவித்து வருகிறோம் என்றால் தற்போதும் கூட்டுபட்டாவாகத்தான் உள்ளது. அவ்வாறு பாகம் பிரிக்கும்போது எனது தாயாருக்கு ஒரு பாகம் பிரித்து ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. எனது தாயாருக்கு தனியாக சொத்து உள்ளது. எனது அம்மாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அவர் தனிபட்டா வாங்கி அவர் அனுபவித்து வந்தார் என்றும், அந்த சொத்துதான் தற்போதுவரை

பாகம் பிரிக்கப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் அம்மா பாக சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பற்றி எனக்குத் தெரியாது. 5ம் பிரதிவாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குரிய பாகத்தைதான் வாங்கியுள்ளார் என்றும், நான் பொய்யாக பாகம் பிரிக்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய பாகத்தைத்தான் விற்றுள்ளார்கள் என்றும், அவ்வாறு 5ம் பிரதிவாதிக்கு விற்ற விவரம் எனக்கு 2012லேயே தெரியும் என்றும், அதை தெரிந்துகொண்டே தற்போது பாகம் எதுவும் ஏற்படவில்லை என்றும், அந்த விவரங்கள் தெரியாது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. தற்போது அந்த இடத்தின் மதிப்பு கூடிவிட்டதால் தற்போது எனக்கு பாகம் வேண்டும் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பாகம் எனக்கு வேண்டும் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கல்லம்பட்டி சர்வே எண்.380/12, 460/2, 466/13, 466/15, 466/2B, 377 ஆகிய சொத்துக்கள் பாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 1ஏக்கர் 24 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அது என் பேரில் உள்ளது. அதையும் சேர்த்து சொல்லியுள்ளார்கள். அந்த நிலம் அப்படியே உள்ளது. குடும்ப சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் நான் வழக்கிற்காக பாகம் பிரிக்கப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாகம் பிரித்ததை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் வாரிசுகளை அவசிய தரப்பினர்களாக சேர்க்காமல் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.